# மார்ச் – 01 – திருநீற்றுப் புதன்

மாமிசத் தவிர்ப்பு – நோன்பிருத்தல்

**“கடவுளே! உமது பேரன்புகேற்ப எனக்கு இரங்கும்.”– திபா 51:1**

---

## முதல் வாசகம்: யோவேல் 2 : 12 – 18

இறைவனாகிய ஆண்டவர் கூறுவதாவது: “இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக் கொண்டு, உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்” என்கிறார் ஆண்டவர். ”நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக்கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்” அவர் அருள் நிறைந்தவர், இரக்கம் மிக்கவர் நீடிய பொறுமையுள்ளவர், பேரன்பு மிக்கவர் செய்யக் கருதிய தீங்கைக் குறித்து மனம் மாறுகின்றவர். ஒருவேளை அவர் தம்மனத்தை மாற்றிக் கொண்டு, உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு தானியப் படையலையும் நீர்மப் படையலையும் நீங்கள் அளிக்குமாறு உங்களுக்கு ஆசி வழங்குவார். இதை யார் அறிவார்? சீயோனில் எக்காளம் ஊதி எச்சரியுங்கள் புனிதமான உண்ணா நோன்புக்கென நாள் குறியுங்கள் வழிபாட்டுப் பேரணியைத் திரட்டுங்கள். மக்களைத் திரண்டு வரச்செய்யுங்கள் புனித கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள் முதியோரைக் கூடிவரச் செய்யுங்கள், பிள்ளை களையும்இ பால்குடிக்கும் குழந்தைகளையும் ஒருசேரக் கூட்டுங்கள் மணமகன் தன் அறையை விட்டு வெளியேறட்டும் மணமகள் தன் மஞ்சத்தை விட்டுப் புறப்படட்டும். ஆண்டவரின் ஊழியர்களாகிய குருக்கள் கோவில் மண்டபத்திற்கும் பலி பீடத்திற்கும் இடையே நின்று அழுதவண்ணம் ‘ஆண்டவரே, உம் மக்கள்மீது இரக்கம் கொள்ளும் உமது உரிமைச்சொத்தை வேற்றினத்தார் நடுவில் நிந்தைக்கும் பழிச்சொல்லுக்கும் ஆளாக்காதீர் எனச் சொல்வார்களாக! ‘அவர்களுடைய கடவுள் எங்கே? ’ என வேற்றினத்தார் கூறவும் வேண்டுமோ? அப்பொழுது ஆண்டவர் தம் நாட்டின்மேல் பேரார்வம் கொண்டு தம்மக்கள் மீது கருணை காட்டினார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே இரக்கமாயிரும் ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம்.

## இரண்டாம் வாசகம்: 2 கொரிந்தியர் 5: 20- 6 : 2

சகோதர சகோதரிகளே! நாங்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாய் இருக்கிறோம். கடவுளே எங்கள் வாயிலாக வேண்டுகோள் விடுக்கிறார். ஆகவே கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் மன்றாடுகிறோம். நாம் கிறிஸ்து வழியாகத் தமக்கு ஏற்புடையவராகுமாறு கடவுள் பாவம் அறியாத அவரைப் பாவநிலை ஏற்கச் செய்தார். நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட அருளை வீணாக்க வேண்டாம் என அவரோடு இணைந்து உழைக்கும் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். ”தகுந்த வேளையில் நான் உமக்குப் பதிலளித்தேன் விடுதலை நாளில் உமக்குத் துணையாய் இருந்தேன்” எனக் கடவுள் கூறுகிறார். இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்!

## நற்செய்தி: மத்தேயு 6: 1 – 6,16 - 18

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : “மக்கள் பார்க்க வேண்டுமென்று அவர்கள் முன் உங்கள் அறச் செயல்களைச் செய்யாதீர்கள். இதைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். இல்லையென்றால் உங்கள் விண்ணகத் தந்தையிடமிருந்து உங்களுக்குக் கைம்மாறு கிடைக்காது. நீங்கள் தர்மம் செய்யும்போது உங்களைப்பற்றித் தம்பட்டம் அடிக்காதீர்கள். வெளிவேடக்காரர், மக்கள் புகழ வேண்டுமென்று தொழுகைக் கூடங்களிலும் சந்துகளிலும் நின்று அவ்வாறு செய்வர். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் தர்மம் செய்யும்போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும். அப்பொழுது நீங்கள் செய்யும் தர்மம் மறைவாயிருக்கும் மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார். நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது வெளிவேடக்காரரைப்போல் இருக்க வேண்டாம். அவர்கள் தொழுகைக்கூடங்களிலும் வீதியோரங்களிலும் நின்றுகொண்டு மக்கள் பார்க்க வேண்டுமென இறைவேண்டல் செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்று விட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். ஆனால் நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக் கொண்டு, மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார். மேலும் நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம். தாங்கள் நோன்பு இருப்பதை மக்கள் பார்க்கவேண்டுமென்றே அவர்கள் தங்கள் முகங்களை விகாரப்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் நோன்பு இருக்கும்போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து, முகத்தைக் கழுவுங்கள். அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாது மாறாக. மறைவாய் இருக்கிற உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார்” என்றார்.

**தியானம்:** தவக்கால தொடக்கநாளில் எமது உள்ளார்ந்த மனிதனின் புதுப்பித்தலுக்காக அழைக்கப்படுகின்றோம். வேலைப்பழு மற்றும் குடும்பப் பொறுப்புக்களோடு செபித்தல் மட்டுல்ல தவமுயற்சிகளை மேற்கொள்ளுதல் எளிதான காரியமல்லவெனலாம். ஆயினும், செபித்தல் இறை உறவின் உரையாடல் என்பதனை ஆண்டவர் இயேசு போதிக்கின்றார். ஆதலால், எமது வழிபாடுகள் வெளிவேடமற்றதாக, குறைச்சொல்லுக்கு அப்பாற்பட்டதாக இருத்தல் வேண்டுமெனவும் நற்செய்தி மறைமுகமாக எச்சரிக்கின்றது. அடுத்தவரது பாராட்டுக்காகச் செய்யப்படும் வழிபாடுகள் இறையாட்சியைப் பெற்றுத்தர முடியாது. எனவே, எமது ஆன்மாவின் இருண்ட காலத்தை ஆராய பழக்க வழக்கங்கள், பேச்சு, செயல், சிந்தனை, பாவநாட்டங்கள், பாவச்செயல்கள், சாதியத்தோடான ஆணவம், அதிகாரம், விட்டுக்கொடுத்து ஒத்துப்போகாத்தன்மை ஆகிய அனைத்திலிருந்தும் விடுபட தவக்காலம் அழைக்கின்றது. ஆதலால், எமது உள்ளார்ந்த மனிதனை மாத்திரம் ஆராய்வதோடு நின்றுவிடாது, நெருங்கிவரும் இறையாட்சியில் தகுதிபெற எமது அறச்செயல்களும், தவமுயற்சிகளும் மறைவாயிருக்கின்ற இறைதந்தையின் பார்வைக்கு உகந்தவையாதல் முக்கியம் (மத்தேயு 6:16-18) என்பதனையும் கவனத்தில் இருத்திக் கொள்வோம். “நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக் கொண்டு, மறைவாயுள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக்காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்” (மத்தேயு6:6) என்று இறைமகன் இயேசு போதித்ததனை வேறுவிதமாகச் சிந்திக்கவும் நாம் இத்தவக்காலத்தில் அழைக்கப்பட்டுள்ளோம். கடந்த காலங்களில் எப்படி வாழ்ந்தோம் என்பதல்ல முக்கியம். மாறாக, எமது வாழ்வில் எஞ்சியுள்ள ஒவ்வொரு நிமிடங்களையும் எவ்வாறு வாழப்போகின்றோம் என்பதே முக்கியமாகும். இத்தவக்காலத்தின் நாற்பது நாட்களிலும் எமது உள்ளார்ந்த மனிதனை ஆண்டவர் இயேசுவோடு பாலை நிலத்தில் உலாவர அனுமதிப்போம். இறை வார்த்தையின் அர்த்தத்தை உணர்ந்து செயற்படுவோம். இதுவே, எமது தவக்கால மனமாற்ற முயற்சியாக அமையட்டும்.